முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்த நாள்! கழகத் தொழிலாளர் அணி சார்பில்

மாநிலம் முழுவதும் ஏழையெளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவீர்!

தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 2 - தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக தலைசிறந்த நிர்வாகியாக தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி,

பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளான ஜூன் 3 அன்று , தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் மாநிலம் முழுவதும் மாநில நிர்வாகிகள் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமெனவும்;

இப்பிறந்த நாள் விழாவினை, தொழிலாளர் அணிச் சார்பில் நலிந்த தொழிலாளர்களுக்கும் ஏழையெளியோர்க்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் வண்ணம் தத்தமது பகுதிகளில் உள்ள முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களில் ஏழையெளியவர்களுக்கு உணவு வழங்கியும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கியும் எளியோர் எழுச்சி நாளாக சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகளையும் அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களையும் தொழிலாளத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

கம்பம் பெ.செல்வேந்திரன் – டி.ஆர்.பாலு – தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

தாம்பரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா!

மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அறிக்கை!

சென்னை, ஜூன் 2- தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாம்பரம் மாநகர, திமுக நடத்தும், முத்தமிழ் அறிஞர் கலைஞர், அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா 3.6.2026 புதன்கிழமை, மாலை 5.30. மணிக்கு, மேற்கு தாம்பரம் சண்முகம் சாலை பாரதி திடலில் நடைபெறுகிறது.

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், தாம்பரம் தொகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த, வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம், எனது தலைமையில், (எஸ்.ஆர். ராஜா எக்ஸ்.எம்.எல்.ஏ) நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்,பாலு எம்.பி., கழகத் தேர்தல் பணி குழு செயலாளர் கம்பம் பெ. செல்வேந்திரன், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மண்டல குழு தலைவர் பகுதி கழகச் செயலாளர் டி காமராஜ் வரவேற்புரையிலும் எஸ்.இந்திரன், வே கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, இரா.நரேஷ் கண்ணா. எம் சி, வ.விஜயரங்கன், பொ.சதாசிவம், கி.வேல்மணி, எஸ். ஜி.கருணாகரன் ஆகியோர்கள் முன்னிலையிலும், நடைபெற உள்ளது, கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர், இ.கருணாநிதி எக்ஸ். எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், ஆர்.எஸ். கிருத்திகாதேவி பகுதி கழகச் செயலாளர்கள் இரா. சுரேஷ், த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், ஆ. நடராஜன், ஏ.கே. கருணாகரன்,

தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஆதிமாறன், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு. ரஞ்சன் இறுதியில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி துணை செயலாளர் ஆர். செல்வகுமார் நன்றியுரை மற்றும் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள் பகுதி கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொதுமக்கள் என ஏராளமான கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்து தருமாறு, எஸ்.ஆர்.ராஜா, தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள்!

123வது வட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றி - நல உதவிகள் வழங்கல்!

வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை அறிவிப்பு!

சென்னை, ஜூன்.2- சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123 வது வட்ட திமுக சார்பில் வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் நாளை (03.06.2026) முத்தமிழ் அறிஞர் தமிழகத்தின் சிற்பி டாக்டர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு நமது வட்டக் கழகம் முழுவதும் பாகங்கள் வாரியாகவும் தெருக்கள் தோறும் கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கி ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் விபரங்கள் வருமாறு:

நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள்.

1. திருவள்ளுவர் சாலை வன்னியபுரம் கழக இரு வண்ணக் கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மு.இ.ஏழுமலை வட்ட கழக செயலாளர். எஸ்.மாரிமுத்து வட்ட பொருளாளர் S.L மணிகண்டன் வட்ட துணை செயலாளர் டி குமார் பகுதி துணை அமைப்பாளர் இலக்கிய அணி வி எம் சங்கர் கணேஷ் பகுதி அமைப்பாளர் வழக்கறிஞர் அணி ஜே ஸ்ரீதர் பகுதி அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி S. ஜீவா பகுதி துணை அமைப்பாளர் மாணவரணி கு.சிரஞ்சீவி வட்டத் துணை அமைப்பாளர் இளைஞர் அணி

2. கவிஞர் பாரதிதாசன் சாலை கழக இரு வண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் எஸ் லதா மற்றும் கே பார்த்திபன்

3. கவிஞர் பாரதிதாசன் சாலை டிடிகே ரோடு சந்திப்பு கலைஞரின் திருவுருவப்படம் வைத்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு மு.இ ஏழுமலை வட்டக் கழக செயலாளர்

4. பக்தவச்சலம் தெரு திருவள்ளூர் சாலை சந்திப்பு கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மு ஏழுமுல்லைவேந்தன் பகுதி பிரதிநிதி இரா இளவழகன் வட்ட அமைப்பாளர் மாண வரணி

5. அப்பாதுரை தெரு ராஜ நாயக்கன் தெரு சந்திப்பு கழக இரு வண்ணக் கொடியேற்றி இனிப்பு மற்றும் மாணவ அணிகளுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் .R. தயாளன் பகுதி துணை அமைப்பாளர் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை த. பத்மநாபன் மாவட்ட துணை அமைப்பாளர் சுற்றுச்சூழல் அணி. டி குமார் பகுதி அமைப்பாளர் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி இ ஹரிகாரன் வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்.

6. பாரதியார் தெரு திருவள்ளூர் சாலை சந்திப்பு கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் குளிர்பானங்கள் வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு N. செங்குட்டுவன் பகுதி துணை அமைப்பாளர் நெசவாளர் அணி ப. கார்த்திக் பகுதி அமைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி A சதீஷ் குமார் பகுதி பிரதிநிதி M முருகன் கழக மூத்த முன்னோடி

7. வ உ சி தெரு திருவள்ளுவர் சாலை சந்திப்பு இளைஞரணி மன்றம் பலகை புதுப்பித்தல் கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். நிகழ்ச்சி ஏற்பாடு N. உதயன் பகுதி துணை அமைப்பாளர் இளைஞர் அணி S கணேஷ் வட்ட அமைப்பாளர் இளைஞர் அணி

8. திருவள்ளுவர் சாலை கழக இரு வண்ணக் கொடியேற்றி இனிப்பும் அறுசுவை உணவு வழங்குதல். நிகழ்ச்சி ஏற்பாடு கே நிவாஸ் மாவட்ட துணை அமைப்பாளர் வர்த்தக அணி

9. திருவள்ளுவர் சாலை சீத்தம்மாள் சாலை சந்திப்பு ஒலிபெருக்கி அமைத்து கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு D. ஜெகநாதன். பகுதி பிரதிநிதி மெடிக்கல் S. கோபிநாத் . பகுதி துணை அமைப்பாளர் தொண்டரணி எஸ் குணசேகர். பகுதி துணை அமைப்பாளர் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி

10. திருவள்ளுவர் சாலை கலைஞர் திரு உருவப்படம் மலர் தூவி அஞ்சலி செய்து இனிப்பு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு எம் . நந்தகோபால். மாவட்டத் துணை அமைப்பாளர் வழக்கறிஞர் அணி 11. எல்டம்ஸ் ரோடு ராமலிங்கேஸ்வரர் கோயில் சந்திப்பு கழக இரு வண்ண கொடி ஏற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு எம் இளையராஜா பகுதி துணை துணை அமைப்பாளர் தொண்டர் அணி

12. ராமலிங்கேஸ்வரர் தெரு. எல்டாம்ஸ் சாலை சந்திப்பு கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். நிகழ்ச்சி ஏற்பாடு கு ராஜி மாவட்ட தலைவர் நெசவாளர் அணி A.தேவேந்திரன் மாவட்ட துணை அமைப்பாளர் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை. R. அசோக்குமார் பகுதி பிரிதிநிதி

13. ராமலிங்கேஸ்வரர் தெரு குடிசைப்பகுதி முத்தமிழ் அறிஞர் கலைஞரின். திரு உருவப் படத்திற்கு மலர் தூவி இனிப்பு மற்றும் பள்ளி மாணவ மணவிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு எம் உஷா வட்ட துணை .செயலாளர் எஸ் விஜய் வட்ட துணை அமைப்பாளர் இளைஞர் அணி

14. ராமலிங்கேஸ்வரர் தெரு 2 வது இடம் கலைஞர் திரு உருவப்படம் மலர் தூவி மரியாதை செய்து இனிப்புகள் வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு ப.வசந்தா வட்ட துணை அமைப்பாளர் மகளிர் அணி 15. எல்டாமஸ் சாலை பெரியார் சாலை சந்திப்பு கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு ஒலிபெருக்கி மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு ஏ பாஸ்கர் மாவட்ட துணை அமைப்பாளர் வர்த்தக அணி

16.பெரியார் சாலை. டாக்டர் கலைஞரின் திருவுருவப் படம் மலர் தூவி அஞ்சலி செய்து இனிப்புகள் வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு K. விஜயகுமார் மாவட்ட பிரதிநிதி,

17. பெரியார் சாலை 2 வது இடம் கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு கே. ஜோதி மாவட்ட துணை அமைப்பாளர் தொண்டரணி

18. காமராஜர் தெரு கலைஞர் திரு உருவப்படம் மலர் தூவி மரியாதை செய்து இனிப்புகள் வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு B.அமுலு வட்ட துணை அமைப்பாளர் மகளிர் அணி

19. காமராஜர் தெரு ஒலிபெருக்கி அமைத்து கழக இரு வண்ண கொடியேற்றி கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து இனிப்பு மற்றும் குளிர்பானம் வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு க.கணபதி பகுதி அமைப்பாளர் இலக்கிய அணி

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

மக்கள் பணியே கழகத்தின் மூச்சு!



உடன்பிறப்பின் உள்ளத்தில்
குடியிருக்கும் தலைவா..
அறிவே ஆலயம்,
மக்கள் பணியே வேதம்,
என்றே வாழ்ந்து
எம்மை வழி நடத்தும் தலைவா...

உளியின் அடியால்
புண்பட்ட அங்கம்,
கலையின் வடிவில்
சிலையாவது போல்,
எதிர்ப்பின் தணலில்
பண்பட்ட தங்கம்,
எம் தலைவன் வழியில்
நடைபோடும் கழகம்,

வாக்கு அரசியல்
நம்மை தோற்கடித்தாலும்,
ஒன்றிய அரசு
நம்மை புறக்கணித்தாலும்,
மக்கள் நலப்பணி
செய்திட விழையும்
முயற்சி உழைப்பு
இதுவே உம் வெற்றி ....

பெற்ற தமிழ் மண்ணை,
தமிழக மக்களை
வெற்றிப் படிகளில்
ஏற்றிடும் ஏணியாய்,
சாதனை திட்டங்கள்
பற்பல தந்து
சரித்திரம் படைத்ததே
உமது வெற்றி,

வெவ்வேறு மதத்தில்
பிறந்திருந்தாலும்,
பேசும் மொழியால்
பிரிந்திருந்தாலும்,
மனிதம் ஒன்றே
தலையாய்க்கொண்டு
மனதால் இணைத்த
அரசியலே உம் வெற்றி

நம் இனம் எதுவென்று
நூற்றாண்டுகளாக
மறந்த நமக்கு,
திராவிட இனம் என்பதை
நூறாண்டுகளாக நினைவிருத்தி
உணரச் செய்ததே
நம் கழகம் தானே;

நான்கு மொழிகளை
ஈன்றெடுத்த தாய்மொழி
எம் தமிழ் மொழி ஆதலால்,
அதை செம்மொழி என்று
பார் அறியச் செய்ததே
தலைவா உம் உழைப்புதானே;

குலக்கல்வி, தேவதாசி,
இரட்டைக்குவளை, முலைவரி,
என்று இருந்த
முறையற்ற சமூகத்தை
கொண்டிருந்த தமிழகத்தை
சுய மரியாதை கற்று
சமூக நீதியுடன், தமிழன்
தலைநிமிர்ந்து நடந்திட,
உழைத்ததே நம்
கழகம் தானே;

எதிர்வரும் எதிர்காலம்
மாறுவதாக எண்ணி,
பிம்பத்தை நம்பி
ஏமாறாமல் இருக்க,
கால வளர்ச்சிக்கேற்ப
உண்மைகளை உணர்த்தி
மாற்ற வேண்டும் நாம்;

வரும் தடை கடந்து
திறம்பட நடந்து,
கட்டுக்கோப்பாய் கழகத்தை
இட்டுச் சென்ற தலைவா,
உம் வழி நடக்கும்
தளபதி வழியில்,
கரம்கோர்த்து உழைப்போம்,
வெற்றிக் கனி பறித்து
உமக்குக் காணிக்கை ஆக்குவோம்.

எம்.ஜாகீர் உசேன்

கலைஞர் - காலத்தை வென்ற ஒளிச்சுடர்

பெண்ணுக்கு உரிமை என்றால் பேச்சல்ல என்றாய்,
பேரொளி போலப் பாதைகள் பல திறந்தாய்!
சுயஉதவிக் குழுக்களால் சிறகுகள் தந்தாய்,
சுமந்த துயரைக் களைந்திடச் சமூகத்தை மாற்றினாய்!
விதவையின் விழியில் விடியலை விதைத்தாய்,
விழுந்த மனங்களிலும் நம்பிக்கையை நட்டாய்!
கலப்புத் திருமணத்திற்கு கரம் நீட்டி நின்றாய்,
கட்டிய மரபுகளைக் கருத்தால் வென்றாய்!
கல்விக்கு கோயிலாய் பல்கலைகள் கட்டினாய்,
காலத்தின் கதவுகளை இளையோர்க்குத் திறந்தாய்!
அறிவின் அகல்விளக்கை அணையாமல் காத்தாய்,
அறியாமை இருளை அழித்தெறிந்து சென்றாய்!
ஆறுகள் ஆழமாய் ஓடிடத் தூர்வாரினாய், ஆயிரம் உழவர்களின் வாழ்வோட்டம் காத்தாய்!
உழவர் சந்தைகள் உருவாக்கி வைத்தாய், உழைப்பின் வியர்வைக்கு உயர்ந்த விலை தந்தாய்!
வருமுன் காப்போம் என வறுமையைத் தடுத்தாய்,
வாழ்வின் வாசலிலே வளமெனும் தீபம் ஏற்றாய்!
கிராமத்தின் குரலுக்கு கைகொடுத்து நின்றாய்,
கீழ்த்தட்டு மக்களின் கனவுகளை வென்றாய்!
தொழிலுக்கு தமிழகம் திகழவே செய்தாய்,
தொலைநாட்டு முதலீட்டைத் தமிழ்மண்ணில் சேர்த்தாய்!
டைடல் பூங்காவால் தகவல் யுகம் தந்தாய், தமிழரின் திறமையை உலகெங்கும் கொண்டாய்!
வள்ளுவன் வானுயர வாழ்த்துச் சிலை வைத்தாய்,
வாழ்வியல் வேதத்துக்கு வளமான உரை தந்தாய்!
குறளின் கருத்துகளை குவலயம் அறியச் செய்தாய்,
குலமத வேறுபாடைக் குரலாலே வென்றாய்!
தாக்கியவர்களையும் தழுவிடும் இதயம் கொண்டாய்,
தாழ்ந்தோரின் துயரத்தில் தந்தையென நின்றாய்!
இலக்கியம், கல்வியென இமயங்கள் போற்றினாய்,
இனமான தமிழருக்கு இதயமாய் வாழ்ந்தாய்!
சுயமரியாதைச் சூரியனாய் சுடரொளி வீசினாய்,
சமத்துவச் சாலையில் சமூகத்தை நடத்தினாய்!
தொண்ணூற்று ஐந்தாண்டும் தோயாத மனம் கொண்டாய்,
தோன்றிய தலைமுறைகள் தோறும் நினைவாய் நின்றாய்!
மண்ணில் பிறந்த மனிதர் பலர் உண்டு, மக்களின் மனதில் பிறப்பவர் சிலரே!
காலத்தை வென்ற கலைஞர் நீரே
காலங்கள் கடந்தும் தமிழின் ஒளிச்சுடரே!

மருத்துவர் ப.முருகதாஸ்
விருதாச்சலம்

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைகுலைய வைத்துள்ள முதல்வர்!

‘தினகரன்’ சிறப்பு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன். 2- தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு எவ்வாறெல்லாம் சீரழிந்து வருகின்றது என்பதை பல சம்பவங்களை குறிப்பிட்டு தலையங்கம் எழுதி குற்றம் சாட்டியுள்ளது. ‘தினகரன்’ நாளேடு.

அது வருமாறு:-

தமிழகத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று, காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் ஆதரவுடன் புதிய கூட்டணியை அமைத்து ஆட்சியைப் பிடித்துள்ளது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற நாளில் இருந்தே, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக கோவை சூலூர் பகுதியில் சிறுமி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கடலூரில் இளம்பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டதும், சென்னை வேளச்சேரியில் மூதாட்டி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதும், மதுராந்தகத்தில் மூதாட்டியை நகைக்காக கொலை செய்த சம்பவமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மரக்காணத்தில் 11வயது சிறுமிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை, கடலூர் அருகே வடலூரில் 30 வயது இளம் பெண்ணின் சடலம் மீட்பு உள்ளிட்டவை சட்டம் ஒழுங்கை நிலைகுலைய வைக்கின்றன.

எப்போதுமே கொலை களமாக திகழும் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் தற்போது கண்ணில் கண்டவர்களை எல்லாம் அரிவாளால் வெட்டி சென்ற ஒரு கும்பல் 10 பேரை வெட்டி காயப்படுத்தியுள்ளது. வேறு வழி

தினகரன்
ஜூன் 1, 2026 திங்கட்கிழமை
சரியும் சட்டம் ஒழுங்கு
தமிழகத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று, காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் ஆதரவுடன் புதிய கூட்டணியை அமைத்து ஆட்சியைப் பிடித்துள்ளது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற நாளில் இருந்தே, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக கோவை சூலூர் பகுதியில் சிறுமி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.
கடலூரில் இளம்பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டதும், சென்னை வேளச்சேரியில் மூதாட்டி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதும், மதுராந்தகத்தில் மூதாட்டியை நகைக்காக கொலை செய்த சம்பவமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மரக்காணத்தில் 11வயது சிறுமிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை, கடலூர் அருகே வடலூரில் 30 வயது இளம் பெண்ணின் சடலம் மீட்பு உள்ளிட்டவை சட்டம் ஒழுங்கை நிலைகுலைய வைக்கின்றன.
எப்போதுமே கொலை களமாக திகழும் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் தற்போது கண்ணில் கண்டவர்களை எல்லாம் அரிவாளால் வெட்டி சென்ற ஒரு கும்பல் 10 பேரை வெட்டி காயப்படுத்தியுள்ளது. வேறு வழி

யின்றி 3 தினங்களுக்கு பின்னர் போலீசார் நேற்று ஒருவரை துப்பாக்கியால் காலில் சுட்டு பிடித்துள்ளனர். தமிழகத்தில் இன்றளவில் நடக்கும் கொலை, கொள்ளை சம்பவங்களை அடுக்கி கொண்டே போகலாம்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், குற்றங்களைக் குறைப்பதற்கும் சில முக்கிய கோப்புகளில் விஜய் கையெழுத்திட்டார். மாநிலம் முழுவதும் போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த 37 மாவட்டங்கள் மற்றும் 9 முக்கிய நகரங்களை உள்ளடக்கிய 65 காவல் நிலையங்களுடன் கூடிய போதைப்பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது.

ஆனால் தமிழகத்தில் இப்போதும் நடக்கும் பல வன்முறை சம்பவங்கள் போதையின் பாதையில் திரியும் இளைஞர்களும், சிறுவர்களும் அரிவாளை கையில் எடுத்து கொண்டு களம் புகுந்திருப்பதையே படம் பிடிக்கிறது. பெண்கள் பாதுகாப்பிற்கு சிறப்பு பிரிவு உருவாக்கப்படும் என கூறிய தமிழக அரசு, சிங்கப்பெண் அதிரடிப்படையை உருவாக்க உத்தரவிட்டது. ஆனால் அதற்கான தொடக்க விழா கூட இன்னமும் நடத்தப்படவில்லை.

அதற்குள்ளாக தூத்துக்குடி மாவட்டத்தில் அவர்கள் உருவாக்கிய சிங்கப்பெண் அதிரடிப்படையில் பெண் போலீசிடம், இன்ஸ்பெக்டரே சில்மிஷம் செய்த சம்பவம் பரபரப்பை உருவாக்கியுள்ளது. பயிர்களை மேயும் வேலிகளை வைத்து கொண்டு முதல்வர் விஜய், பெண்களுக்கு எப்படி பாதுகாப்பு தரப்போகிறார் என்பது கேள்விக்குறியாகி வருகிறது. சென்னையில் 16வயது சிறுவனுக்கு மது கொடுத்து விட்டு, பாலியல் வன்கொடுமையில் ஏட்டு ஈடுபட்டதாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

தவெக ஆட்சி அமைத்து ஒரு மாதம் ஆவதற்குள் பாலியல் வன்கொடுமை, கொலை, ரவுடியிசம் போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. விளம் பரங்களிலும், ரீல்ஸ்களிலும் அதிக கவனம் செலுத்தும் அமைச்சர்களும், அரசு நிர்வாகமும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தவறிவிட்டதாக எதிர்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

தவெக நிர்வாகிகளே சில இடங்களில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவதும், பொதுமக்களை மிரட்டி மாமூல் வாங்கிய சம்பவங்களும் பொதுவெளியில் அரங்கேறி வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்காகவே ஆட்சிக்கு வருவதை போல தோற்றத்தை உருவாக்கிய தவெக அரசு, இப்போது ஆட்சியில் அமர்ந்தவுடன் சட்டம் ஒழுங்கில் கோட்டை விடுவது சரியல்ல.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு குற்றம் சாட்டியுள்ளது.